# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 மார்கழி 10ம் திகதி முதல் 16ந் திகதி வரை

## *மனந்திரும்புதலின் வழியே மகிழ்வுடன் கிறிஸ்து ஆண்டவரை ஏற்றுக் கொண்டிட இருக்கும் தடைகளைக் களைத்திடுவோம்*

01. புகழ்ச்சிக்காக

- (திருப்பாடல் 126: 1-2) **"சீயோனின் அடிமை நிலையை ஆண்டவர் மாற்றின போது நாம் ஏதோ கனவு கண்டவர் போல இருந்தோம். அப்பொழுது நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது. நாவில் களிப்பாரவாரம் எழுந்தது"**
- இருந்த, இருக்கின்ற, வரப்போகின்ற கிறிஸ்து ஆண்டவர் எங்களுக்காக மகாசெயல்களைச் செய்துள்ளார். மீட்பின் உரிமையை மீண்டும் எமக்குப் பெற்றுத் தந்துள்ளார். அவரது பரிசுத்த அன்பின் குணநலன்களை தியானித்தவாறு நாம் நன்றிப் புகழ்ச்சியை சமர்ப்பிப்போம். எமது மீட்பின் ஆண்டவரைக் குறித்து வாழ்த்திப் பாடுவோம்.
- புபுது பாடல் இல 129 "பூர்ணமானவரே உம்மைக் காணும்….."

02. கடந்தவார செய்தியை முன்கொண்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வோம்.

- இறைஅரசிற்காக அனைத்தையும் கைவிட நீங்கள் நான் புபுது மக்கள் என்றவகையில் தயாரா?
- கிறிஸ்து ஆண்டவர் எமக்கு வெளிப்படுத்திய கைவிடுதலின், இடமளித்தளின், சொல்வதை செய்தலின், பலியாகுதலின் அன்பிற்கு பங்கு கொள்வதற்கு தனிப்பட்ட ரீதியில் குடும்பமாக, சீடத்துவ சங்கமாக புபுது மக்களாக நீங்கள்/ நான் /நாம் தயாரா?
- கடந்த வார நற்செய்தியை முன்கொண்டு உங்கள் அனுபவத்தை சங்கமாக்கிக் கொள்ளவும்.

03. வாராந்த நற்செய்தி

- "…….''பாவமன்னிப்பை அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்'' என முழக்கமிட்டார்.
- புனித லூக்கா 3:1-6 வரை பரிசுத்த வேதாகம பகுதியை வாசித்து திருவருகைக் காலத்தின் இரண்டாம் வாரத்தை முன்கொண்டு இறைவாக்கினர் ஊடாக அவர் எமக்கு அழைப்பு விடுப்பது எதற்காக? பகிர்ந்து கொள்ளவும். இரண்டாம் மற்றும் 3ம் வசனத்திற்கு விசேட அவதானத்தை செலுத்தவும்
- இறைவனின் செய்தி பாலை நிலத்தில் செக்கரியாவின் மகன் யோவானிடம் வந்தது…. மேலும் அவர் யோர்தான் நதி சுற்றுப் பிரதேசத்தில் சஞ்சரித்தவாறு பாவமன்னிப்பு பெறும் பொருட்டு பச்சாதாபப்பட்டு மனம் திரும்பி திருமுழுக்கு பெறுங்கள் என அறிக்கையிட்டார்.

04. வார்த்தையின் ஊழியருக்காக

- திருவருகைக் காலத்தின் இரண்டாம் வரா நற்செய்தி வழியாக எமது கிறிஸ்தவ விசுவாசம் எதிர்பார்ப்பினை உறுதிப்படுத்தியவாறு சந்தோசம் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காக நற்செய்தியை முன்வைத்தவாறு மனந்திரும்பி வந்த, இருக்கின்ற, வரவிருக்கின்ற கிறிஸ்து ஆண்டவரை மகிழ்ச்சியோடு வரவேற்பதற்கு ஆயத்தமாகுவோம். ஏனெனில் அவர் வழியாக எமக்கு பாவமன்னிப்பும், விடுதலையும் கிடைத்துள்ளது. புது யுகம் உதயமாகியுள்ளது.
- ஸ்நாபக அருளப்பர் பிரசங்கித்தது மனந்திரும்புதலைப் பற்றியே. மனந்திரும்புதல் என்பது முதலில் இறை விருப்பத்திற்கு ஏற்ப புதுப் பிறப்பிற்காக வாசலை திறந்து கொள்வதாகும். அதனூடாக வாழ்விற்கு புது விடியலை ஏற்படுத்திக் கொள்ளவதாகும். அதாவது கிறிஸ்து ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக எமது வாழ்வினை தயார்படுத்திக் கொள்ளுதலும்

எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கிறிஸ்து தூதுச் சேவையை சிறப்பாக இறை விருப்பத்திற்கு ஏற்ப செய்து முடித்தலாகும். இறை புத்திரத்தன்மையில் வாழ்ந்தவாறு அடுத்தவரையும் இறை விருப்பத்தை நிறைவேற்றிட உட்படுத்துவதாகும், தூண்டுவதாகும்.

05. எமது பேரில்

- கிறிஸ்து ஆண்டவரின் நோக்கினை எமது நோக்கமாக்கிட உண்மையான தாகம் எம்மிடம் இருக்கிறதா? என்று ஆராய்ந்து பார்க்கவும்.
- (பாரூக் 5:1) **''எருசலேமே உன் துன்பதுயரத்தின் ஆடைகளை களைந்துவிடு. கடவுள் உனக்கு அருளும் மாட்சியின் பேரழகை என்றென்றும் ஆடையாக அணிந்துகொள்''** இது குறித்து உண்மையான தாகம் உங்களுக்குள் /எனக்குள் இருக்கிறதா?
- எமது நாட்டின் இரசியல் நிலையை பாருங்கள். சேறு பூசுதல், காட்டிக் கொடுத்தல், பொறுப்பின்மை, அநீதி, அசாதாரணம், ஒழுக்கக்கேடு இவ்வாறு எண்ணற்றவை நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆவ்வாறே சமூகத்தில், சூழலில் நாளுக்கு நாள் பாவம் அரசாள்கிறது. வாழ்க்கைகள் வீணாகி அழிந்து கொண்டிருக்கிறது. மக்களில் அதிகமானோர் உதாசீனமாக்கப்பட்டு வீழ்ச்சியடைந்துள்ளனர்.
- இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் திருவருகைக் காலத்தின் இரண்டாம் வாரத்தில் ஆழமான மனந்திரும்புதலுக்கு எம்மை அழைக்கிறார். மனந்திரும்புதல் என்பது இறை அரசை அரசாளவைப்பதற்கு தடையாக இருக்கும் அனைத்தையும் குப்பையாக கண்டு கிறிஸ்து ஆண்டவர் பேரில் முழு மனதுடன் திரும்பிவருதலே.

06. செயல்பாட்டிற்காக

i. இவ்வாறான யுகத்தில் சீடர்களான எமது பொறுப்பு மற்றும் அழைப்பு என்ன? நாட்டிற்காக ஆண்டவர் நமக்கு என்ன கூறுகிறார் என்பதை செபத்தில் கேட்போம்.
ii. கிறிஸ்து ஆண்டவரின் நோக்கினை மற்றவர்களுடன் பகிர்ந்தவாறு அவர்களைப் புரிந்துணரச் செய்வோம்.
iii. நத்தாரின் உண்மையான அர்த்தத்தை எமது வாழ்வில் உரிமையாக்கிக் கொண்டவாறு அர்த்தமுள்ள நத்தாரை கொண்டாடிட படி எடுப்போம்.
iv. உண்மையான ஆன்ம மகிழ்வினை அனுபவித்திட தாகங் கொள்வோம்.

07. புபுது பாடல் இல. பொருத்தமான பாடலை பாடவும்